தேசிய அருங்கலைகள் பேரவை - 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அருங்கலைகள் பேரவையின் (''பேரவை'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்தஅறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து பேரவையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பேரவையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பேரவையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பேரவை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்துகின்ற கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக பேரவையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாககாணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக செயற்படுவதனை முடிவுறுத்தலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பேரவையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள்,புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது,

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்பு உடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 48 ஆம் பந்தி பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் பதிலிடப்படக் கூடாத போதும் ரூபா 296,596 ஆன செலவு வருமானத்திற்கு பதிலிடப்பட்டிருந்ததால் வருமானம் மற்றும் செலவு குறைத்து காட்டப்பட்டிருந்தது.	வருமானத்திற்கு செலவு பதிலிடப்படாததுடன் கணக்குகளின் மிகை அல்லது பற்றாக்குறை நிதி செயலாற்றல் கூற்றில் பெறுவனவாக கண்க்கீடு செய்யப்பட்டுள்ளது.	நியமம் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் பதிலிடப்படக் கூடாது.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 53 ஆம் பந்தி பிரகாரம்	2025 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும்	நியமம் பிரகாரம் நிதி

	நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் தேறிய சொத்து / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றிற்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.	போது ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	அறிக்கைகளில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	மதிப்பீட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,306,074 ஆன மீளாய்வாண்டிற்குரிய செலவு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 99 ஆம் பந்தி பிரகாரம் செலவாக கணக்கீடு செய்யப்படாததால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் ஆண்டின் செலவுகளை திட்டவட்டமாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 123 ஆம் பந்தி பிரகாரம் காலப்பகுதி ஒன்றிற்கான அனைத்து வருமானம் மற்றும் செலவுகள் அந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது கடந்த ஆண்டிற்குரிய ரூபா 6,005,713 செலவு மற்றும் ரூபா 2,049,541 ஆகிய வருமானங்களின் தேறிய பெறுமதியான ரூபா 3,956,172 முன்னைய ஆண்டின் சீராக்கமாக திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முன்னைய காலப்பகுதிக்கான தவறுகளை சரிசெய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 பந்தி பிரகாரம் தவறு இடம்பெற்ற காலப்பகுதிக்காக சமர்ப்பித்துள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் அறிவிக்க வேண்டிய போதும் பேரவையினால் முன்னைய காலப்பகுதிக்குரிய கூட்டுத் தொகை ரூபா 8,055,254 ஆன 114 தவறுகளை உட்படுத்தி ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் அறவித்திருக்கவில்லை.	2025 ஆண்டு இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் குறித்த காலப்பகுதிக்குரிய வருமானம் மற்றும் செலவுகளை அந்த ஆண்டில் இனங்காண வேண்டும். முன்னைய ஆண்டின் தவறுகளை சரிசெய்யும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் அறிவிக்க வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இல் 34 ஆம் பந்தி பிரகாரம் பிரதான முகாமைத்துவ தரப்பினரிற்கு செலுத்தப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் பேரவை பிரதான முகாமைத்துவ பதவியணியின் அத் தகவலகள் அல்லது தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறவில்லையென	2025 ஆண்டு இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்த வேண்டும்.

	நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.		
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இல் 76 ஆம் பந்தி பிரகாரம் ரூபா 61,414,668 ஆன பணிக்கொடை ஒருக்கீடுகளிற்குரிய சேவை பின்நலகள் கடப்பாட்டுடன் தொடர்பான நிகழ்கால சேவைக் கிரயத்தின் தற்போதைய பெறுமானத்தை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆய்வு செய்து எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம சேவை பின்நலகள் கடப்பாட்டுடன் தொடர்பான நிகழ்கால சேவைக் கிரயத்தின் தற்போதை பெறுமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதி கிரயம் ரூபா 9,409,554 தொகை மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 3,841,145 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களை உள்ளக குழுவொன்றினால் மதிப்பிடப்பட்டு ரூபா 5,560,500 இற்கு கணக்கீடு செய்திருந்த போர்தும், அங்கு கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கிலிருந்து அகற்றியிருக்காத காரணத்தால் சொத்துக்களின் தேறிய பெறுமானம் ரூபா 5,568,409 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களை மீள் பெறுமானம் இடும் போது கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமானத்தை கணக்குகளிலிருந்து அகற்றி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு சனவரி 01 திகதியன்று கட்டிட முன்கொண்டு வந்த பெறுமதி ரூபா 95,784,755 ஆன போதும் அட்டவணை பிரகாரம் முன்கொண்டு வந்த பெறுமதி ரூபா 63,200,283 ஆனதில் கட்டிட மீதிகளிற்கிடையே ரூபா 32,584,472 வித்தியாசம் காணப்பட்டது. பேரவையின் பெறுமானத் தேய்வுக் கொள்கை நேர்கோட்டு முறையில் பெறுமாமனத் தேய்விடலான போதும் அதற்கு மாற்றமாக மேற்குறித்த அட்டவணைபடுத்திய முன்கொண்டு வந்த பெறுமதிக்கு கட்டிடங்கள் பெறுமானத் தேய்விடப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டிற்குரிய கட்டிட பெறுமானத் தேய்வு செலவுகள் ரூபா 2,858,014 குறைபாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் கட்டிட தேறிய பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணையில் காட்டப்படும் மீதிகளிற்கிடையிலான வித்தியாசத்தை இனங்கண்டு கொள்ள முடியாததுடன் கட்டிட பெறுமதியை மதிப்பீடு செய்து இந்த மீதியை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் சரயான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டியதுடன், கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் அட்டவணை பெறுமதிகள் சமமாக வேண்டும். கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(இ)	கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்க வேண்டிய அகுல்மடுவ லாக்ஷா பயிற்சி நிலையத்தின் மலசலகூட தொகுதி நிர்மாணம் மற்றும் திருகோணமலை மாவட்ட கிண்ணியா கைப்பணிகள் கைத்தொழில் பயிற்சி நிலைய கூறையை மறுசீரமைக்க மேற்கொண்ட ரூபா 1,146,862 செலவு, மீளாய்வாண்டில் செலவாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் அப் பெறுமதியால் கட்டிடக் கணக்கு குறைவாக மற்றும் ஆண்டின் பற்றாக்குறை கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.	சரிசெய்ய நடடிக்கை எடுக்கப்படும்.	மூலதனமாக்க வேண்டிய பெறுமதியை சரியாக இனங்கண்டு சொத்தாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	தேசிய அருங்கலைகள் பேரவைக்குரிய நிலையங்களில் நடாத்திச் செல்லப்படும் 68 சேமிப்புக் வங்கிக் கணக்குகளின் மொத்த மீது ரூபா 6,207,423 நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டு இருக்கவில்லை.	2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்படும்.	பேரவைற்கு சொந்தமான அனைத்து வயங்கிக் கணக்குகளினதும் மீதிகளையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	ரூபா 30,000,000 ஆன 7 நாள் கோரிக்கை வைப்பொன்று முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த வைப்பிற்குரியதாக மீளாய்வாண்டில் வட்டி ரூபா 3,225,000 தொகையை வருமானமாக இனங்காணாததால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. 2023 ஜுன் 16 திகதி ஆரம்பிக்கப்படடிருந்த இந்த கோரிக்கை வைப்பின் மீளாய்வாண்டு இறுதியில் பெறுமதி ரூபா 34,974,452 ஆகவிருந்ததால் அதன் பிரகாரம் அத்திகதியில் சொத்துக்கள் மீதியும் ரூபா 4,974,452 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	வைப்பிற்குரியதாக வட்டி வருமானத்தை வினவி இலங்கை வங்கிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. எதிர் காலத்தில அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.	வட்டி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். கோரிக்கை வைப்புக்களை நியமம் பிரகாரம் நடைமுறை சொத்து மீதியாக சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை சார்க் கைப்பணிகள் கைத்தொழில் அபிவிருத்தி நிலையத்தை நிறுவுவதற்கு உத்தேச காணியை மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்குரிய செயற்திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்திய ரூபா 1,486,200 தொகை மூலதனமாக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது அது செலவாக காட்டப்பட்டிருந்து.	அந்த செலவு செயற்திட்ட ஆயத்த செலவாக (Project Preparatory Work) மேற்கொண்ட செலவாகையால் அதை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கவில்லை.	செயற்திட்டத்திற்காக மேற்கொண்ட ஆயத்த செலவை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்து பின்னர் மூலதனமாக்க வேண்டும்.
(எ)	எதிர்காலத்தில பூர்த்தி செய்யப்படாத புலத்சிங்ஹல பிரம்பு பயிற்சி நிலையத்தின் மூலப்பொருள் வங்கியை நிறுவுவதற்கு	மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அந்த ஆண்டின் செலவாக	நடைமுறை வேலைகளை இனங்கண்டு சரியாக

மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.45 மில்லியன் செலவை நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்களில் முன்கொடுவரப்படும் 2014 ஆண்டில் இலங்கை கைப்பணிகள் சபைக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களிற்காக பேரவைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,432,122 ஆன மீதியை மீளாய்வாண்டில் தீர்த்திருக்கவில்லை.	லக்சல நிறுவனத்திற்கு அவ்வப் போது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பெறவேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வராகொட அமைந்துள்ள மாகாண அலுவலகத்தில் களஞ்சியப்படுத்திருந்த கிலோகிராம் 2086.5 ஆன செப்பு தொலைபேசி கம்பிகள் காணாமல் போனது தொடர்பாக ஆரம்ப விசாரணை குழுவினால் 2023 ஏப்ரல் 20 திகதி வெளியிடப்பட்ட ஆரம்ப புலனாய்வு குழு அறிக்கை பிரகாரம் நிறுவனத்திற்கு எற்பட்ட ரூபா 1,344,225 நட்டத்தை தனியார் பாதுபாப்பு சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து தாமதமின்றி அறவிட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரை அந்த நட்டத்தை அறிவட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொலிஸினால் விசாரணை ஒன்றை நடாத்துவதனால் அது தொடர்பாக மேலதிக தகவல்களை வழங்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.	ஏற்படட் நட்டததை தாமதமின்றி தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2020 முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் ஒப்பந்தங்களிலிருந்து நிறுத்தி வைத்த கூட்டுப் பெறுமதி ரூபா 575,541 ஆன 05 நிறுத்தி வைத்தல்களை 2024 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.	நிறுத்தி வைத்துள்ள தொகையை விடுவிக்குமாறு குறித்த நிறுவனங்களிலிருந்து கோரிக்கை முன்வைக்கப்படாததால் நிறுத்தி வைத்தலாக வைக்கப்பட்டுள்ளது.	உத்தரவாத காலம் முடிவடைந்துள்ள ஒப்பந்தங்களின் நிறுத்தி வைத்துள்ள தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்.

சட்டங்கள் விதிகள்/ பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்துள்ள அரச முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாளர் நாயத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,962,487 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,019,195 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,981,682 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்சிக்கு திறைசேரி மானியம் ரூபா 5,775,772 இனால் அதிகரித்தமைக்கு ஒப்பாக தனிப்பட்ட சம்பள ஊதிய செலவு ரூபா 23,434,486 இனால் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறமை இண்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரம்பு, செம்பு, மட்பாண்டம் மற்றும் ஏனைய விசேட சம்பிரதாய மற்றும் கிராமிய கைத்தொழிலிற்கான மூலப்பொருளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை விரிவாக்க 9 மூலப்பொருள் வங்கிகளை ஆரம்பிப்பதற்காக 2021 திசெம்பர் 31 திகதி ரூபா 10,555,480 பெறுமதியான 21 வகையான சொத்து உபகரண உருப்படிகள் 248 இனை கொள்வனவு செய்திருந்த போதும், 2024 நவம்பர் 25 திகதி வரை அந்த வங்கிகளை செயற்படுத்தியிருக்கவில்லை. இந்த கொள்வனவினுள் 9 மூலப்பொருள் வங்கிகளிற்காக ரூபா 1,033,600	கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்துடன் வாகன திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மூலப்பொருள் வங்கிகளிற்காக கொள்வனவு செய்துள்ள குறைபயன்பாட்டுடன் காணப்படும் அனைத்து அலுவலக உபகரணங்களையும் தேசிய அருங்கலைகள் பேரவை மாகாண அலுவலகங்களின்	திட்டத்தின் பிரகாரம் மூலப்பொருள் வங்கிகளை ஆரம்பித்து கொள்வனவு செய்த சொத்துக்களின் பயன்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். செயற்திட்டத்திற்காக ஒதுக்கிய தொகையை அதற்காகவே பயன்படுத்த வேண்டியதுடன் திறைசேரி

	செலவில் கொள்வனவு செய்த 9 பாதுகாப்பு பெட்டிகளும் உள்ளடங்கின்றன. மேலும், மூலப்பொருள் வங்கிகளிற்காக 2021 ஆண்டில் வழங்கியிருந்த தொகையிலிருந்து ரூபா 3,421,100 பேரவையின் மூன்று வானங்களை திருத்த பயன்படுத்தப்பட்டு இருந்தது.	பயன்பாட்டிற்கு பயன்படுத்துமாறு 2024.02.29 திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிஏற்பாட்டை ஏனைய பணிகளிற்காக பயன்படுத்த திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
(ஆ)	கைத்தொழில் அமைச்சினால் பகிர்ந்தளிக்கப்பட்ட, வீரகெடிய மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகங்களில் காணப்பட்ட பயன்படுத்தப்பட்ட பதிக் உபகரணங்கள் குருவிட்ட மூங்கில் பயிற்சி நிலையத்திற்கும் ஹபராதுவ பிரதேச செயலகத்தில் இருந்த உபகரணங்களை ஹபராதுவ பயிற்சி நிலையத்திற்கும் 2024 ஒக்டோபர் 12 திகதி ஒப்படைத்திருந்த போதும் அந்த உபகரணங்கள் கணக்காய்வு திகதி 2025 ஏப்ரல் 30 திகதி வரை விளைவற்று காணப்பட்டன. இந்த சொத்துக்களை பொருட்பதிவேட்டில் பதிய அல்லது கணக்கீடு செய்திருக்காத காரணத்தால் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் பிரச்சினை காணப்பட்டது. 2023 ஆண்டு முதல் ஹபராதுவ பயிற்சி நிலையத்தின் பயிற்சிகள் நிறுத்தப்பட்டிருந்தன.	முன்னால் பிரம்பு, செப்பு, பட்பாண்டம், மரப் பண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு அமைச்சின் மூலம் பிரதேச செயலாளர்கள் ஊடாக பல்வேறு நிறுவனங்களின் வளப் பயங்களிப்பின் கீழ் பதிக் பயிற்சி பாடநெறி நடாத்தப்பட்டுள்ளதுடன் அந்த அமைச்சு கலைக்கப்பட்ட பின்னர் அந்த நிகழ்ச்த் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.	குறித்த சொத்துக்களை பயன்படுத்தி ஆக்கபூர்வமாக பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது ஏனைய பொருத்தமான அரச நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபையினால் 64 பயிற்சி நிலையங்களில் நடாத்திச் செல்லப்படும் பயிற்சி பாடநெறிகளிற்காக முறையாக பாடத்திட்டங்களை பரிந்துரைத்திருக்காததுடன், இலங்கை கைப்பணிகள் சபையில் பயிற்சி பெற்ற கலைஞர் ஆலோசகர்கள் அவர்கள் பயிற்சி பெற்ற பாடத்திட்டத்தின் மீது பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவதானிக்கப்பட்டது.	தேசிய அருங்கலைகள் பேரவையின் மூலம் சம்பிரதாக கைப்பணி பாடநெறிகளிற்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதால் அப் பெறுமதியை பேணிக் கொண்டு சம்பிரதாயத்தை முன்கொண்டு செல்லும் நோக்கில் காணப்படும் பழைய பாடத்திட்டத்தின் மீது பயிற்சி நெறிகள் நடாத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் காலரீதியான தேவைப்பாட்டை கவனத்திற் கொண்டு சிறிய அளவில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	முறையான பாடத்திட்டத்துடன் தகுவாய்ந்த ஆலோசகர்களை ஈடுபடுத்தி பயிற்சி பாடநெறிகளை நடாத்த வேண்டும்.

(ஈ)	“சில்ப அபிமானி - 2024” தேசிய கைப்பணிகள் போட்டி மற்றும் கண்காட்சிக்கு உரிய போட்டி நிபந்தனைகள் பிரகாரம் வடிவமைப்புக்களை சமர்ப்பிப்பதாயின் தேசிய அரங்கலைகள் பேரவையில் பதிவு செய்தவர்கள், ஆக வேண்டும். அவ்வாறாயினும் தேசிய கைப்பணிகள் போட்டியின் சில விருது பெற்றவர்கள் மற்றும் மாகாண போட்டியில் வெற்றி பெற்ற சில கலைஞர்கள் அவ்வாறு பதிவு செய்திருக்கவில்லை. இவ்வாறு போட்டி நிபந்தனைகளிற்கு முரணாக பதிவு செய்யாத 17 கலைஞர்களிற்கு தேசிய போட்டியின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 285,000 பணப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.	பதிவு செய்யாத கலைஞர்களில் 07 பேர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளதுடன், ஏனைய கலைஞர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கபடுகிறது. அவ்வாறே எதிர்வரும் சில்ப அபிமானி போட்டிக்கு பதிவு செய்யாத கலைஞர்களின் ஆக்கங்கள் போட்டிக்காக சமர்ப்பிக்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கைப்பணிகள் போட்டியை நடாத்தும் போது முறையாக மற்றும் தொழில்ரீதியானதாக போட்டி நிபந்தனைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2010 ஆண்டில் 17 மாவட்டங்களில் 18 பயிற்சித் துறைகளை மேவுகை செய்யும் வகையில் இலங்கை கைப்பணிகள் சபைக்குரிய 94 கலைரீதியான பயிற்சி நிலையங்களை பேரவைக்கு ஒப்படைத்திருந்த போதும் பேரவையினால் அந்த கலைரீதியான பயிற்சி நிலையங்களின் அநேகமானவற்றை பராமரிக்காததுடன் மட்பாண்ட, அவான், தையல், எம்ரொயிட் போன்ற துறைகளிற்காக பயிற்சி வழங்கப்படுவதில்லை. சில சம்பிரதாய மற்றும் தேசிய ரீதியாக முக்கிய கைத்தொழிலான சம்பிரதாய சித்திரம், லாக்ஷா, மரச் சிற்பம் மற்றும் மூங்கில் கைத்தொழில் பயிற்றுவிக்கும் நிலையங்கள் காணப்பட்ட போதும் அவற்றில் பயிற்சி பெறுபவர்களும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டனர்.	நிலையங்களின் அளவை குறைக்கும் போது நிரந்த அரசினல்லாத, வசதிகள் அற்ற, பன்சல் மற்றும் பொது நிலையங்கள் போன்ற இடங்களில் நடாத்திச் செல்லும், ஆசிரியர்கள் ஓய்வுபெறல், குறித்த துறைக்கு மற்றும் பிரதேச பயிலுனர்களின் வருகை பலவீனம் போன்றவை கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறான நிலைமையிலும் தற்போது நிரந்தர அரசினல்லாத நிலையங்களில் நடாத்திச் செல்லும் சுமார் 14 நிலையங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே நிலையங்களை ஒப்படைக்கும் போது காணப்பட்ட 18 பயிற்சித் துறைகள் தற்போது 27 வரை விரிவாக்கப்பட்டுள்ளது.	பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள பிரதேசத்திற்கே உரிய மற்றும் பிரசித்தி பெற்ற பைப்பணிகள் அந்த பிரதேசங்களில் பயிற்றுவிக்க வேண்டும்.
(ஆ)	வீரகுல மட்பாண்ட கைத்தொழில் பயற்சி நிலையத்தினுள் உற்பத்தி நிலையத்தையும் நடாத்திச் செல்வதுடன் 2019 ஆண்டின் பின்னர் அங்கு பயிற்றுவிக்கும்	மட்பாண்ட கைத்தொழில் கிரமாமமொன்றின் மைத்தியில் காணப்படும் இந்த நிலையத்திற்கு பயிலுனர்கள் வருகைதரும் குறைவொன்று	மட்பாண்டக் கைத்தொழல் காணப்படும் பிரதேசமாகையால் கவர்ச்சியான

	நடவடிக்கைகள் இடம்பெறாததால் அதன் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தராக செயற்படும் அருங்கலைகள் பேரவையின் உத்தியோகத்தர் சேவையின்றி இருந்தார். இந்த பயிற்சி நிலையத்தினுள் 2 வனை சில்லுகளும் செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் இரண்டு கலைஞர்கள் மாத்திரம் இந்த நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.	காணப்படுவதுடன், அதனை சேவை மற்றும் உற்பத்தி நிலையமொன்றாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செயலிழந்து காணப்படும் வேட்கோத் திகிரிகளின் திருத்தம் தொடர்பாக கண்டிறிந்துள்ள போதும், அதற்காக பாரிய நிதி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதால், அதனை மேற்கொள்வது ஆக்கபூர்வமானதா என்பது பிரச்சினைக்குறியதாகும். அவ்வாறே இங்கு முழுநேரமாக வருகை தந்து உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்வது இருவர் ஆன போதும் வெளிவாரியாக மண் அரைத்தல், போரணை பணிகள் போன்ற நடவடிக்கைகளிற்கு வெளி கலைஞர்கள் வருவை தருவதெென.	நடைமுறையூடாக மாணவர்களை ஆட்சேர்த்து ஒழுங்கான பயிற்சி மற்றும் முயற்சிகளிற்கான வசதிகளை வழங்குதல் ஊடாக நிலையத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும். நிலைய பொறுப்பு உத்தியோகத்தரை இந்த நிலையத்திற்கு மேலதிகமாக ஏனைய மற்று சேவை நிலையங்களிற்கும் அனுப்புவதன் ஊடாக உச்ச சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.
(இ)	2020 நவம்பர் 29 திகதி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பழுதடைந்த பண்டக ஏலவிற்பனையில் ரூபா 1,586,723 பெறுமதியான பயன்பாட்டிலிருந்து அகற்றி பண்டங்களை தேசிய அருங்களை பேரவையினால் கொள்வனவு செய்திருந்ததுடன் மீண்டும் அவற்றை 2023 திசெம்பர் 12 திகதி ரூபா 925,000 இற்கு விற்பனை செய்ததில் பேரவைக்கு ரூபா 661,723 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண மற்றும் நட்டத்தை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த பழுதடைந்த பண்டங்கள் விளைவற்று காணப்பட்டதால் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	அரச நிதியை உச்ச வினைத்திறனுடன், சிக்கனமாக மற்றும் ஆக்கபூர்வமாக செலவிட வேண்டியதுடன் நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஈ)	1982 இலக்கம் 35 கொண்ட தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தின் 17 (ஆ) பிரிவின் பிரகாரம் கைப்பணி பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தும்	தேசிய அருங்கலைகள் பேரவை கலைஞர்களின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய கன்றுகளை வழங்கி கன்று பெறுனர்களின் கையொப்பத்துடனான ஆவணமொன்றை மாகாண	பேரவையின் நோக்கங்களிற்கு இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் தேவையாவதுடன் செலவிடப்ட்ட

	மூலப்பொருள் மற்றும் பூர்த்தியான பண்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பது தேசிய அருங்கலைகள் பேரவையின் நோக்கமொன்றாவதுடன், அதன் கீழ் பயிச்செய்கை செயற்திட்டங்களிற்காக 517,500 கன்றுகளை கொள்வனவு செய்ய 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் முறையே ரூபா 1,456,726 மற்றும் ரூபா 2,246,400 ஆன அமைச்சின் நிதி செலவிடப்பட்டிருந்த போதும் பயிரிடுவது தொடர்பான போதிய பின்னூட்டல் செய்யப்படாத காரணத்தால் மேற்கொண்ட செலவின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக போதிய உறுதிப்பபாட்டை பெற்றுக் கொள்ள முடியவில்லை.	உத்தியோகத்தரினால் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன் குறித்த பயிர்ச் செய்கைகளை அவதானித்து முன்னேற்ற அறிக்கையை தலைமை அலுவலகத்திற்கு அழைப்பித்துக் கொள்ளப்பட்டுள்ளது.	நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்தியுள்ளதாக உறுதி செய்ய வேண்டும்.
(உ)	2023 திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய கணக்கின் கீழ் காட்டியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 880,520 ஆன சில்ப அபிமானி 2023 மாகாண மற்றும் தேசிய கைப்பணி போட்டி மற்றும் சனதிபதி விருத வைபவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எனினும் அங்கிகார செலவின மதிப்பீட்டில் உள்ளடங்காததால் அமைச்சினால் மீள்நிரப்பப்படாத செலவொன்றை கட்டுப்பாட்டு சபையின் அங்கீரமின்றி கடந்த ஆண்டு மிகையிலிருந்து பதிவழித்திருந்தது.	இந்த தொகை அமைச்சினால் மீள்நிரப்ப முடியாதென அறிவித்துள்ளதால் தொடர்ந்தும் பெறவேண்டிய மீதியொன்றாக பேணிச் செல்ல முடியாததால் இலாப நட்ட கணக்கிற்கு செம்மையாக நடவடிககை எடுக்கப்பட்டது.	மதிப்பீட்டிற்கு இணங்க செலவினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த செலவினுள் அமைச்சினால் ஏற்றுக் கொள்ளாத செலவுகள் உள்ளடங்குமாயின் அந்த செலவினை மேற்கொள்ள அங்கீகரித்த மற்றும் உறுதி செய்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கைப்பணி கலைஞர்களிற்கு தேவையான மூலப்பொருட்களை சலுவை விலையில் வழங்கும் நோக்கில் புலத்சிங்ஹல பிரம்பு பயிற்சி நிலையத்தில் மூலப்பொருள் வங்கியொன்றை அமைப்பதற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்தல் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 3.45 மில்லியன் செலவிட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்ப நிர்மாண நிலையில் காணப்படுவதனால் இக் கட்டிடத்தை ஆக்கபூர்வ பணிக்காக பயன்படுத்த முடியாத விளைவற்று காணப்பட்டது.	2022 ஆண்டில் தேசிய மூலப்பொருள் வங்கியை நிறுவுவதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத காரணத்தால் நிர்மாணித்துள்ள கட்டிடத்தை பயன்படுத்த பொருத்தமானவாறு வேலைகளை நிறைவு செய்து கொள்ள முடியவில்லை. அதன் பிரகாரம் கட்டிடத்தை பயன்படுத்த முடியுமானவாறு அபிவிருத்தி செய்து கைப்பணி துறைக்குரிய செயற்திட்டமொன்றை செய்வதற்கு அல்லது வேறு பொருத்தமான செயற்திட்டமொன்றிற்கு பயன்படுத்த காணப்படும் இயலுமை தொடர்பாக புலத்சிங்ஹல பிரதேச செலயலாளரிடமிருந்து அறிக்கை ஒன்றை பெற்று அதன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.	பூர்த்திசெய்யப்படாத கட்டிடத்தை பூர்த்தி செய்து ஆக்கபூர்வ கடமையொன்றிற்கு பயன்படுத்த அல்லது ஏனைய தரப்பினரிற்கு முறையாக ஒப்படைத்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பேரவையினால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக உற்பத்திகளை நிகழ்நிலை முறையில் விற்பதற்காக Lakshilpa.com எனும் பெயரில் இணையத் தளமொன்றை ஆரம்பிக்க 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் ரூபா 12,508,240 செலவிடப்பட்டிருந்தது. 2022 முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியினுள் இணையத் தளத்தின் ஊடாக ஈட்டியுள்ள மொத்த வருமானம் ரூபா 30,225 ஆனதுடன், அதில் ரூபா 1,214 தொகை மீளாய்வாண்டில் ஈட்டப்பட்டிருந்தது. வாடிக்கையாளர்களினால் இணையத் தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையிற்கு கட்டளையிட்ட பண்டங்கள்	இணையத்தளம் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் இலவசமாக செய்யப்பட்ட ஒன்றாகையால் அதற்காக அரச நிதி செலவிடப்படவில்லை. அவ்வாறே இந்த இணையத்தளத்தில் கட்டளை இடப்பட்ட பண்டங்கள் பேரவையிடம் காணப்படுகின்றதா என அறிந்து கொள்ளும் வசதிகள் இல்லை. அந்த வசதிகளை வழங்க முடியுமான இயலுமை பற்றி கண்டறிந்து அதன் பிரகாரம் குறித்த மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	உரியவாறு அபிவிருத்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்..

	பேரவையிடம் இருக்காத காரணத்தால், மீளாய்வாண்டில் ரூபா 34,973 ஆன தொகை வாடிக்கையாளரிற்கு மீள் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக இணையத் தளத்தை நிறுவுவதற்காக மேற்கொண்ட செலவினம் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது.		
(இ)	2013 ஆம் ஆண்டிலிருந்து நீண்டகால குத்தகை அடிப்படையில் காவந்திஸ்ஸபுர கிராமத்தை நிர்மாணிப்பதற்காக 1.6187 ஹெக்டயர் காணி திஸ்ஸமஹராம பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி ரூபா 18,432,042 தொகை மற்றும் சபையினால் ரூபா 8,744,211 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிலும் நிலத்தை மற்றும் கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தியிருக்கவில்லை. மேலும் அதற்கு குத்தகையாக ரூபா 36,768,000 மற்றும் மீளாய்வாண்டிற்காக பாதுகாப்பு உள்ளிட்ட ஏனைய செலவாக ரூபா 1,403,402 தொகை பேரவையினால் செலவிடப்பட்டிருந்தது.	காவந்திஸ்ஸபுர கைப்பணிகள் கிராமத்தை நிறுவும் போது அந்த பிரதேசத்தினுள் சுற்றுலா வாய்ப்புக்கள் காணப்பட்ட போதும் தற்போதளவில் சுற்றுலா வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் கைப்பணிகள் கிராமமொன்றாக நடாத்திச் செல்வது வெற்றியளிக்காது. இதன் காரணமாக காணி மற்றும் ஆதனங்கள் தொடர்பாக ஹம்பந்தொட் மாவட்ட செயலாளர் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் மற்றும் இயந்திரவியல் அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடி பயனுள்ள பணிக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	காவந்திஸ்ஸ புர கிராமத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்ய அல்லது உரிய நடவடிக்கையொன்றிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடக்க வேண்டும்.
(ஈ)	பிரம்பு இயந்திரங்கள் 03 இனை உற்பத்தி செய்து கொள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு 2022 மே 24 திகதி ரூபா 3,850,740 தொகை செலுத்தியிருந்த போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் அந்த இயந்திரம் அல்லது செலுத்திய தொகை பேரவைக்கு கிடைத்திருக்கவில்லை.	இந்த தொகையை தேசிய அருங்கலைகள் பேரவைக்கு செலுத்துவதாக இயந்திரவில் அபிவிருத்தி சபையின் தலைவரினால் அறிவித்துள்ளதால் அந்த தொகையை கோரி எழுத்துமூல கடிதம் அனுப்பியுள்ளதென.	அரச நிதியை உச்ச வினைத்திறமையுடன் பயன்படுத்த வேண்டியதுடன் இயந்திர உபகரணங்களை அல்லது நிதியை தாமதமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும்.

3.4 செயற்றிட்டங்கள் அல்லது செயற்பாடுகள்ன் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வலவ்வத்த பயிற்சி நிலையத்திற்காக பதிக் கழிவு நிர் சுத்திகரிக்கும் தொகுதியொன்றை 2023 ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைமையில் நிர்மாணித்திருந்த போதும் 2024 ஆண்டினுள் நிலையத்தில் ஒரு பாடநெறியை மாத்திரம் நடாத்தியுள்ள காரணத்தால் அதன் செயற்பாடுகள் உரியவாறு காணப்படுகின்றனவா என பரீட்சிக்க முடியாதிருந்தது.	இந்த காலத்தினுள் பயிற்சி பாடநெறிகளை நிறைவு செய்த மாணவர்களிற்காக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் 2025 ஆண்டில் குருங்கால பாடநெறியொன்றை ஆரம்பித்து தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2025 ஜுலை மாதமளவில் NVQ 03/04 பதிக் பாடநெறியை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாகாண உத்தியோகத்தர்களின் ஊடாக இனங்காணப்பட்ட பயிற்சி நிலையங்களின் பிரகாரம் குருங்கால பயிற்சி பாடநெறிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த தொகுதியை செயற்பாட்டுடன் பேணிக் கொள்ள, இயலுமானவாறு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரித்து கழிவு நீர் சுத்திகரிக்கும் தொகுதியினால் உச்ச பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வலவ்வத்த பயிற்சி நிலையத்தை பதிக் பயிற்சி நிலையமொன்றாக மாற்றுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கட்டணம் அறவிடும் NVQ பதிக் பாடநெறியை ஆரம்பிக்க 2024 ஆண்டில் திட்டமிட்டிருந்த போதும் 2025 சனவரி வரை பேரவையினால் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டில் மீண்டும் பதிக் பாடநெறியை ஆரம்பிக்க தேவையான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. தற்போது காணப்படும் பாடநெறியின் பின்னர் 2025 ஏப்தல் மாதத்தில் NVQ பாடநெறியை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.	பயிற்சி பாடநெறிகளினால் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்பணிகளை திட்டமிட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.